Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(~~Under Section 154 Cr.P.C.~~)

(~~கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

C

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8082813

1. District / மாவட்டம்: பெரம்பலூர் | PS / காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year / ஆண்டு: 2025 | FIR No. / மு.த.அ. எண்: 01 | Date / நாள்: 01.03.2025

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: ACT 1988 (as ammended 2018) | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 27.02.25 | Date to : நாள் வரை 28.02.25

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் காலை சுமார் 10.30 | Time to : நேரம் வரை காலை சுமார் 11.00

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 4 1/2 கி.மீ மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி பெரம்பலூர் மாவட்டம், ஆலம்பாடி ரோடு அன்னை நகர் OHT அருகில் மனை நம்பர் 4

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. சுபாஷ் சந்திரபோஸ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரெங்கசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43/2025 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி No-147M/35A3 தெற்கு இ.பி.ஆபிஸ் அவ்வையார்நகர், துறைமங்கலம், பெரம்பலூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. சிவக்குமார், பில் கலெக்டர், பெரம்பலூர் நகராட்சி அலுவலகம்.

   2) திரு. ராஜா

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

Signature of the Officer in-charge, Police Station [signature] 01/3/25
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01/03/2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 01.03.25 / 08.15

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR No. எண் POLICE.
VIGILANCE AND ANTI CORRUPTION
PERAMBALUR.

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி, பெரம்பலூர்:**

28.02.2025 தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது R.சுபாஷ் சந்திரபோஸ், என்பவர் என் முன் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார்தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறு உள்ளது. அனுப்புநர், R.சுபாஷ் சந்திரபோஸ், வயது 43/2025, த/பெ ரெங்கசாமி, No-147 M/35A3 தெற்கு இ.பி ஆபிஸ், அவ்வை நகர், துறைமங்களம், பெரம்பலூர். பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். அம்மா, நான் பெரம்பலூர் மாவட்டம், துறைமங்களம் அவ்வை நகரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கம்ப்யூட்டர் சென்டரில் அரசு சார்ந்த துறை ரீதியான ஆவணங்களை ஆன்லைனில் விண்ணப்பித்து தருவதுடன் என்னை நாடி வருபவர்களுக்கு என்னால் ஆன உதவியினை செய்து வருகிறேன். அவ்வாறு நான் செய்து தரும் வேலைக்கு உண்டான சர்வீஸ் சார்ஜினை அவர்களிடமிருந்து பெற்று கொள்வேன். மேலும் புதியதாக வீடு கட்டுபவர்களுக்கு Consultant-ஆக இருந்து வருகிறேன். அந்த வகையில் எனக்கு பெரம்பலூர் மாவட்டம், சொக்கநாதபுரம் கிராமம், கிழக்கு தெருவை சேர்ந்த செல்லையா மகன் வேல்முருகன் என்பவரை நன்றாக தெரியும். அவர் வீடு கட்டுவதற்கு முன்பு என்னிடம் ஆலோசனை கேட்டு அவர் பெரம்பலூர், ஆலம்பாடி ரோடு, அன்னை நகர் OHT அருகில், பிளாட் நம்பர் 4-ல் புதியதாக வீடு கட்டியுள்ளார். வேல்முருகனுக்கு போதிய வெளி அனுபவமும் மற்றும் வெளிபழக்கவழக்கங்கள் இல்லாத காரணத்தால் அவர் என்னிடம் ஆலோசனை கேட்டு மேற்படி வீட்டிற்கு தேவையான புதியதாக வரி ரசீது, மின் இணைப்பு வேண்டியும் அதற்கான பணியினை பார்த்து கொள்ள வேண்டி அதற்குண்டான பணப்பணை எனக்கு அவ்வப்போது தந்துவிடுவதாக சொல்லி வேல்முருகன் என்னை நியமித்திருந்தார். அவரது வேண்டுகோளின் படி அவர் புதியதாக கட்டியுள்ள

வீட்டிற்கு சொத்து வரி ரசீது வேண்டி கிரைய பத்திரம், வில்லங்க சான்று, பட்டா, சிட்டா நகல், காலி மனையின் நில வரி ரசீது ஆகியவற்றின் நகல்களை இணைத்து நான் பயன்படுத்தும் தொலைபேசியின் வாயிலாக ஆன்லைனில் பதிவேற்றம் செய்து 13.02.2025-ம் தேதி 089/CP/24-25/0004518, 089/015/902136 என்ற குறியீட்டு நம்பரில் நான் விண்ணப்பித்திருந்தேன். 27.02.2025-ம் தேதி 8523960619 என்ற தொலைபேசி எண்ணிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் யார் என்று கேட்டேன். நான் பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து ராமு பேசுகிறேன் என கூறினார். நானும் பில் கலெக்டர் சிவகுமார் அவர்களும் உங்களது Site-யை பார்வையிட வருகிறோம் உடனே வாருங்கள் என கூறினார். நானும் சரியென்று கூறிவிட்டு இடத்திற்கு சென்றேன். நான் செல்ல சிறிது காலதாமதம் ஆகிவிட்டது நான் Site-ற்கு சென்று அங்கிருந்த வேல்முருகனிடம் முனிசிபாலிட்டியிலிருந்து வந்தார்களா என்று கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் காலை சுமார் 10.30 மணிக்கு இரண்டு பேர் வந்தார்கள் அதில் ஒருவர் சிவகுமார் என்றும் மற்றொருவர் ராமு என சொல்லி இரண்டு பேரும் என்னிடம் அறிமுகம் செய்து கொண்டு பேசிட்டு வீட்டை பார்த்தாங்க என்றும், பார்த்துவிட்டு பொதுவாக வீட்டு வரி ரசீதிற்கு நிறைய செலவு ஆகும் அதற்காக எங்களுக்கு ஏதாவது கொடுத்து கவனிச்சீங்கனா சீக்கிரமா உங்க வேலையை முடித்து கொடுத்துவிடுகிறோம் என்று சிவகுமார் வேல்முருகனிடம் சொல்லியுள்ளார் என்று அவர் என்னிடம் சொன்னார். அதற்கு வேல்முருகன் சார் அந்த விவரம் எல்லாம் எனக்கு தெரியாது. இந்த வீட்டை பொறுத்தவரை சுபாஷ் சந்திரபோஷ் சாருக்கு தான் எல்லாம் தெரியும். அதனால எதுவாக இருந்தாலும் அவர்கிட்ட பேசிகங்க என்று சென்னதாகவும் அதற்கு அவர்கள் என்னையா இந்த காலத்துலையும் விவரம் இல்லாத ஆளா இருக்கன்னு சொல்லி ஆபிஸ் செலவு மற்றும் அதிகாரி எல்லாம் கவனிச்சா தான் வேலை சீக்கிரமா நடக்கும் அதனால் ரூபாய் 30,000 கொடு நாங்கள் சுபாஷ் கிட்டயும் விவரத்த சொல்லிடுறோம் என சொல்லிவிட்டு அவர்கள் Site-யை பார்வையிட்டுவிட்டு சென்றுவிட்டதாக அங்கிருந்த வேல்முருகன் என்னிடம் சொன்னார் எனவே நான் ராமுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது எம்பா வாரேன்னு சொல்லிவிட்டு ஏன் வரலனு கேட்டாரு சார் நான் வரதற்க்கு

கொஞ்சம் லேட்டாகிவிட்டது அப்போதான் நீங்கள் இரண்டு பேரும் வந்துட்டு போனதா வேல்முருகன் சொன்னாரு நாங்கள் இருவரும் இடத்தை பார்த்துட்டோம், இன்னும் அந்த இடத்தில் சிறு சிறு வேலைகள் இருக்கு நாங்கள் சொன்ன விவரத்தை வேல்முருகன் உங்களிடம் சொன்னாரா என்று கேட்டு விட்டு உங்களுக்கு சீக்கிரமா வேலையை முடித்து கொடுக்க வேண்டும் என்றால் கேட்டத கொடுங்கன்னு சொன்னார் அதற்க்கு நான் சார் அவரால அவ்வளவு பிரட்டமுடியாது அவர் ஏற்கனவே கஷ்டப்படுறாரு பார்த்து செஞ்சு குடுங்க சார் என்று சொன்னேன். வேண்டுமென்றால் சிவக்குமார் சாரிடம் சொல்லி ஏதாவது குறைச்சுக்க சொல்லலாம் நீங்கள் நேரல வாங்கன்னு சொன்னாறு நானும் சரின்னு சொல்லிட்டு சிவகுமார் சாரையும் ராமுவையும் நேரில் சந்திக்க மதியம் சுமார் 2 மணிக்கு சென்றேன். அப்போது அங்கு ராமு மட்டும்தான் இருந்தார். சிவக்குமார் டீ குடிக்க சென்றுள்ளதாகவும் நீங்கள் வந்தவுடன் அவருக்கு போன் செய்து தரச்சொன்னதாக சொல்லிவிட்டு மேலும் ராமு அவரது தொலைபேசியில் இருந்து சிவக்குமாருக்கு போன் போட்டு என்னிடம் குடுத்தார். அப்போது சிவக்குமார் என்னிடம் அவர்களுக்கு ரூபாய் 25,000 பணம் கொடுத்தால் வீட்டு வரி ரசீது இரு தினங்களுக்குள் போட்டு தருகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என சொன்னேன். அதற்கு அவர் மேல் அதிகாரிகளை கவனித்தால் தான் உங்களுக்கு ரசீது சீக்கிரம் கிடைக்கும் இல்லை என்றால் தாமதமாகும் என கூறினார். 2 அல்லது 3 தினங்களுக்குள் பணத்தை ரெடி பண்ணிட்டு எனக்கோ அல்லது ராமுவுக்கோ போன் பண்ணுங்க என கூறினார். நான் அப்போது சூழ்நிலையை சமாளிப்பதற்காக சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 28.02.2025-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் ராமுவுக்கு போன் செய்து வீட்டுவரி சம்மந்தமாக விசாரித்தபோது சிவக்குமார் சார் ஏற்கனவே சொன்னமாதிரி பணத்தை சீக்கிரம் ரெடி பண்ணிட்டு வந்து பாரு சீக்கிரம் முடிச்சி தாரேன் என்று சொன்னார். வேறுவழியில்லாமல் சரிங்க சார் நான் நாளைக்கு ரெடி பண்ணிடுறேனு சொன்னேன், அவரும் சரி நாளைக்கு ரெடி பண்ணிட்டு வா என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என்பதால் என்னிடம் லஞ்சம் கேட்ட பெரம்பலூர் நகராட்சியில் பில்கலெக்டராக வேலைப் பார்க்கும்

திரு.சிவக்குமார் மற்றும் திரு.ராமு என்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அவர்கள் என்னிடம் கேட்ட ரூ-25,000/- லஞ்ச பணத்துடன் 28.02.2025-ம் தேதி மாலை பெரம்பலூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் ஆஜராகி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd **** R.சுபாஷ் சந்திரபோஸ், 28.02.2025) அந்த புகார் மனுவைப் பெற்று அதில் Sir, Received this Computer typed complaint from the complainant on 28.02.2025 at 17.30 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 01.03.2025 at 07.00 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2025, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) S.Vijayalakshmi, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

01-3-25

[S.VIJAYALAKSHMI]
INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI
CORRUPTION.
PERAMBALUR.